7. பேரவையின்முன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

(அ) சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

135. சென்னைப் பெருநகர்ப் பகுதிக்கான பெருந்திட்டத்தில் மாற்றம் செய்வது குறித்து வீட்டு வசதி-நகர்ப்புற வளர்ச்சித் துறையின் 26—10—1983 ஆம் நாளிட்ட 1518 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1971 ஆம் ஆண்டு நகர—நாட்டுப்புற திட்டச் சட்டத்தின (தமிழ்நாடு சட்டம் 351972) 123(2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

136. நுங்கம்பாக்கம் கிழக்குப் பிரிவு பகுதிக்கான நகர திட்ட அமைப்பில் மாற்றம் செய்வது குறித்து வீட்டு வசதி—நகர்ப்புற வளர்ச்சித் துறையின் 25—6—1983 ஆம் நாளிட்ட 962 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1971 ஆம் ஆண்டு நகர-நாட்டுப்புற திட்டச் சட்டத்தின் (தமிழ் நாடு சட்டம் 35[1972) 123(2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

137. வேளாண்மைத் துறையின் 10—5—1974 ஆம் நாளிட்ட II (2) AG[28]5474 ஆம் எண். அறிவிக்கையில் திருத்த மொன்று செய்வது குறித்து வேளாண்மைத் துறையின், 31—10—1983 ஆம் நாளிட்ட 1887 ஆம் எண். அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு வேளாண் விளைபொருள் அங்காடிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 23[1959) 29(4) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது).

138. வேளாண்மைத் துறையின் 9—4—1975 ஆம் நாளிட்ட II (2)]AG[1458[1975ஆம் எண் அறிவிக்கையில் திருத்த மொன்று செய்வது குறித்து வேளாண்மைத் துறையின் 31—10—1983 ஆம் நாளிட்ட 1888 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு வேளாண் விளைபொருள் அங்காடிகள் சட்டத்தின் (தமிழ் நாடு சட்டம் 23]1959) 29(4) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

(ஆ) அறிக்கைகள், அறிவிப்புகள் ஏனைய தாள்கள்.

61. கோரிக்கை எண் 3—மோட்டார் வண்டிகள் சட்டங்கள்—நிர்வாகம் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1984–85. (தமிழ், ஆங்கிலம்).

62. கோரிக்கை எண் 40.—சாலை போக்குவரத்துப்பணி, கப்பல் போக்குவரத்து மற்றும் கோரிக்கை எண் 54—சாலைப் போக்குவரத்துப் பணிகள், கப்பல் போக்குவரத்து குறித்த மூல தனச் செலவு குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு 1984–85 (தமிழ், ஆங்கிலம்).